# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 10** **நாள் 09.01.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணிபுரியும் பெண்கள் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் மானியம் பெற விண்ணப்பங்களை 10.01.2019 முதல் 21.01.2019 வரை சமர்ப்பிக்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, பணிக்கு செல்லும் பெண்கள் தங்களது பணியிடங்களுக்கு செல்வதற்கு ஏதுவாக மானிய விலையில் இருசக்கர வாகனங்களை பெற அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இதனைத் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணிபுரியும் பெண்கள் 2018–19 நிதியாண்டிற்கான அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின்கீழ் மானியம் பெற விண்ணப்பங்களை 10.01.2019 முதல் 21.01.2019 வரை சமர்ப்பிக்கலாம்.

இத்திட்டத்தின் கீழ், அதிகபட்சமாக வாகனத்தின் விலையில் 50 சதவீதம் அல்லது ரூ.25,000 இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு பொருத்தப்பட்ட கூடுதல் சக்கரங்கள் உடைய வாகனத்திற்கு மானியத்தொகையாக அதிகபட்சமாக ரூ.31,250/– அல்லது வாகனத்தின் விலையில் 50 சதவீதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படும்.

இத்திட்டத்தில் மானியம் பெற விரும்பும் மகளிர் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து சொந்த முதலீடு அல்லது வங்கிக்கடன் பெற்று இருசக்கர வாகனம் வாங்க வேண்டும். 125 cc-க்கு மிகாமல் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் (1988) பதிவு செய்யக் கூடிய வாகனத்தை வாங்க வேண்டும். 01.01.2018க்கு பிறகு உற்பத்தி செய்யப்பட்ட புதிய, மாசு ஏற்படுத்தாத வாகனமாக இருக்க வேண்டும்.

மேலும், மகளிர் பயனாளி, தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவராகவும், தமிழகத்தில் வசிப்பவராகவும், 18 முதல் 40 வயது வரை உள்ளவராகவும், ஓட்டுநர் உரிமம் பெற்றவராகவும் இருக்க வேண்டும். அவர்களின் தனி ஆண்டு வருமானம் ரூ.2,50,000/– மிகாமலும் இருக்க வேண்டும்.

பணிபுரியும் பெண்கள் 2018–2019ம் நிதியாண்டிற்கான அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்களை 10.01.2019 முதல் 21.01.2019 மாலை 5 மணி வரை அருகில் உள்ள மண்டல அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், விண்ணப்பங்களை நேரிலோ, பதிவு அல்லது விரைவு தபால் மூலமாகவோ சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்களில் அளிக்க வேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**